**தும்பனை பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

-----------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 26 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூன் 14 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து தும்பனை பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்தின் மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,196,686 ஆக இருந்த போதிலும், அம் மீதி ரூபா 6,178,361 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா 18,325 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய 9 கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 53,592,387 தொகையாக இருந்ததுடன், அதில் 05 ஆண்டு காலத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 102,400 ஆக இருந்தது. ஆண்டு 01 இற்கும் 05 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய நிலுவை கணக்க மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,823,349 ஆக இருந்ததுடன் 2018 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு ரூபா 35,191,491 ஆன மீதி மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது,

**(ஆ) செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 53,507,927 ஆன செலுத்த வேண்டிய 2 கணக்கு மீதிகளில் ஆண்டு 01 இற்கும் 05 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியை மிகைத்திருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 12,058,473 ஆக இருந்தது. 2018 ஏப்ரல் 30 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 40,829,266 ஆன மீதியொன்று மேலும் செலுத்த வேண்டியுள்ளது.

**1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு** | **பெறுமதி** | **இணங்காமை** |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி | | |
| | (i) 59 மற்றும் 61 | - | மீளாய்வண்டிற்குரிய சபை அதிகாரப் பிரதேசத்தில் வியாபார அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டிய வியாபாரங்கள் மற்றும் கைத்தொழில்கள் தொடர்பாக வருடாந்த கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 178(7) | 308,412 | பொருட் கொள்வனவிற்காக கேளவி கையேற்கும் போது பதிவுத் தபாலில் அல்லது மத்திரையிடப்பட்ட கூறுவிலைகள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் உடனடி கூறுவிலை பெற்றுக்கொண்ட 07 சந்தர்ப்பங்களில் பொருடகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | |
| | நிதிப் பிரமாணம்104(3) மற்றும் 104(4) | -- | நட்டங்கள் சேதங்கள் தொடர்பாக பூரண அறிக்கையொன்று சமர்ப்பிப்பதற்கு 07 நாட்களுக்கு மேற்பட்ட காலம் எடுக்கப்பட்டால் ஆரம்ப அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் பெக்கோ இயந்திர விபத்து தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | | | 2012 முதல் 2015 வரையான காலப்பகுதியில் 16 சந்தர்ப்பங்களின் போது வைப்புச் செய்யப்பட்டிருந்த நிறுத்தி வைத்தல் தொகை மற்றும் நானாவித வைப்பு தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | (i) | 2007 மே 17 ஆந் திகதிய 09/2007 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 02(iv) | 54,714 | மீண்டும் சேவையில் ஈடுபடுத்தியிருந்த ஓய்வுபெற்ற வருமான பரிசோதகர் ஒருவருக்கு 2017 சனவரி 25 ஆந் திகதி முதல் 11 மாதங்களும் 07 நர் காலப்பகுதிக்காக சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| | (ii) | 2016 மார்ச் 17 ஆந் திகதிய 2016/3 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தி | | புதிய மதிப்பீடொன்று பெற்றுக்கொண்டதன் பின்னர் புதிய வாடகை உட்பட குத்தகை உடன்படிக்கை திருத்தம் செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் குத்தகை உடன்படிக்கை திருத்தம் செய்யப்பட்டிருந்த 19 புதிய கடைகளின் உடன்படிக்கையை திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,666,137 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 8,456,901 ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருமான விடயம் | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2016 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (i) | வீதவரி மற்றும் வரி | 2,980,000 | 4,253,428 | 3,376,362 | 2,129,228 | 1,225,249 | 1,993,668 | 1,987,277 | 1,252,162 |
| (ii) | வாடகை | 5,155,000 | 3,000,268 | 2,882,981 | 924,297 | 5,252,784 | 4,812,066 | 5,057,900 | 800,084 |
| (iii) | அனுமதிப் பத்திர கட்டணங்கள் | 2,764,000 | 1,533,043 | 1,533,043 | -- | 2,970,000 | 1,526,108 | 1,526,108 | -- |
| (iv) | ஏனைய வருமானம் | 10,708,000 | 8,872,630 | 4,900,161 | 11,406,155 | 10,251,500 | 8,297,794 | 17,123,050 | 8,059,455 |
| | மொத்தம் | 21,607,000 | 17,659,369 | 12,692,547 | 14,459,680 | 19,699,533 | 16,629,636 | 25,694,335 | 10,111,701 |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

திரட்டிய வருமான மூலங்களில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை ரூபா 10,111,701 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை அப்பெறுமதி ரூபா

14,459,680 ஆக இருந்தமையால் நிலுவை வருமானத்தின் அதிகரிப்பு 42 சதவீதமாக இருந்தது.

**2.2.3 வீதவரி மற்றும் வரியும்**

**(அ) வீதவரி மற்றும் வரியும்**

மீளாய்வாண்டின் சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 444,097 ஆக இருந்ததுடன், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பட்டியலிடல் ரூபா 2,896,875 ஆக இருந்தது. அதில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை முறையே ரூபா 173,511 மற்றும் ரூபா 2,006,805 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. இது 39 மற்றும் 70 சதவீதமாக இருந்தன. 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 1,160,656 ஆன நிலுவை அறவீடு பலவீனமான மட்டத்தில் காணப்பட்டதுடன் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 159(1) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கழிவுப்பொருள் வரி**

மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 196,000 ஆன கழிவுப்பொருள் மீதியொன்று 02 ஆண்டுகாலமாக நிலுவையாக காணப்பட்டன.

**(இ) நீர்க்கட்டணம்**

(i) மீளாய்வாண்டின் சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவை நீர்க்கட்டணம் ரூபா 612,065 ஆக இருந்ததுடன், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பட்டியலிடல் ரூபா 573,053 ஆக இருந்தது. அதில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை முறையே ரூபா 248,069 மற்றும் ரூபா 444,147 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தன. இது 40 மற்றும் 77 சதவீதமாக இருந்ததுடன், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 492,902 ஆன நிலுவை மீதியொன்று காணப்பட்டது.

(ii) தற்போது செயலற்று காணப்படும் 03 நீர் முறைமைகளின் 341 பேரிடமிருந்து ரூபா 290,569 ஆன நிலுவை நீர்க்கட்டணம் காணப்பட்டது.

**2.2.4 வாடகை**

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 52 கடைகளிலிருந்து ரூபா 861,381 குத்தகை வாடகை 03 மாதங்களுக்கும் 02 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியிலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அக் கடைகள் தொடர்பாக குத்தகை உடன்படிக்கையின் 22 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்கு சொந்தமான 25 கடைகள் தொடர்பாக மதிப்பீட்டு அறிக்கை 2016 நவம்பர் 25 ஆந் திகதி கிடைக்கப் பெற்றிருந்த போதிலும் அந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு வாடகையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக சபைக்கு ரூபா 383,940 ஆன வாடகையொன்று இழக்கப்பட்டிருந்தது.

(இ) குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள கடைகளின் மாதாந்த வாடகையில் மூன்று மடங்குகள் பிணை

தொகையொன்று வைப்பாக வைக்கப்பட வேண்டிய போதிலும் கடைகள் வாடகை திருத்தம் செய்யப்பட 19 கடைகளின் 03 மாத வைப்புத் தொகையான ரூபா 110,880 தொகையை திருத்தி பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஹதரலியத்த வர்த்தக கடை தொகதியின் 11 ஆம் இலக்க கடை 2015 சனவரி 01 ஆந் திகதி முதல் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) வெளி நபரொருவரால் உதவியளித்த வர்த்தக கடை தொகுதியினை 04 ஆம் இலக்க கடை வாடகை கொடுப்பனவு செய்யப்படவில்லை அத்துமீறி பெற்றுக் கொள்ளப்பட்டு 2016 ஆகஸ்ட் மாதம் முதல் கணனி வியாபாரமொன்றை அனுப்புவதற்காக வேறு தரப்பினருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை இக் கடையை சபைக்கு பொறுப்பேற்கவோ அல்லது சட்டரீதியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக சபைக்கு அண்ணளவாக ரூபா 56,000 அளவிலான வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது.

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,000,000 தொகையும் முத்திரைக் கட்டணமாக ரூபா 9,185,370 ஆக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

#### (அ) நோக்கத்திற்கு செயற்பாடுகளை நிறைவேற்றாமை

(i) நிகழ்ச்சித்திட்ட இல 03 இன் 304-4 செலவின விடயத்திலிருந்து குறுக்கு விதிகள் மற்றும் பாதசாரி கடவை திருத்தங்களுக்கான மீளாய்வாண்டிற்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 200,000 ஆன நிதி ஏற்பாடு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்படுத்தி உரிய நோக்கங்களை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 02 ஆம் இலக்க செலவினை விடயத்தின் மருத்துவ வழங்கல் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டை பயன்படுத்துவது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(a) செலவின விடயம் 203-3 மருத்து வழங்கலுக்காக ரூபா 100,000 ஆன நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அந் நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டு உரிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் நிதி ஏற்பாடு ஏனைய செலவின விடயத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

(b) 205–5 செலவின விடயமான சுகாதார நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 200,000 ஆன நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் போதிலும் ஆண்டின் போது ரூபா 23,576 மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. இது 23 சதவீதமாக இருந்தது.

(iii) 06 ஆம் இலக்க நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 602 – 2 நலன்புரி செலவின விடயத்திற்காக ரூபா 50,000 மீளாய்வாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அந் நிதி ஏற்பாட்டை பயன்படுத்தி உரிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

---

(i) சிதைவடையக்கூடிய சிதைவடையாத கழிவுகள் வேறாக்கி நாளொன்றுக்கு 01 தொன் அளவில் சேகரிக்கப்பட்ட போதிலும் சிதைவடையக் கூடிய கழிவுகளைப் பயன்படுத்தி சேதனப் பசளை உற்பத்தி செய்வதற்கோ அல்லது ஏனைய நடைமுறையொன்றோ பின்பற்றப்படாமல் முறையற்ற வகையில் வெளியேற்றப்பட்டிருந்தது.

(ii) உக்காத கழிவுகளுக்கு இடையே பொலித்தீன், பிளாஸ்ரிக் போன்ற சுற்றாடல் பாதுகாப்பு திட்டமொன்று பின்பற்றப்படாமல் சுற்றாடலுக்கு பாதகமான வகையில் எரிக்கப்பட்டு வந்தது.

(iii) கழிவுப் பொருள் வெளியேற்றப்படும் திக்ஓயவத்த காணியின் கழிவுப் பொருள் பிரிவிற்காக 2018 ஏப்ரல் 03 ஆந் திகதி வரை சுற்றாடல் அதிகாரசபையிடமிருந்து சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) கூட்டிணைந்த திட்டம்**

---

மீளாய்வாண்டிற்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

---

(அ) வெவ்வேறு செயற்பாடுகளுக்காக 05 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூபா 39,956 ஆன முற்பணத் தொகை மற்றும் கலகெதர சுஜாதா பாலிகா வித்தியாலயத்திற்கு முன்னால் வியாபார தொகுதியை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தக்கார நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 883,334 ஆன முற்பணத் தொகை 03 ஆண்டுகளுக்கும 9 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இருந்து தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) புதிய நீர் இணைப்பினை வழங்குவதற்காக 26 பாவனையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு உள்ள இணைப்புக் கட்டணங்கள் ரூபா 67,295 தொகை 2014 ஆண்டு முதல் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 மனித வள முகாமைத்துவம்**

---

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கைக்கு இடையே 20 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன.

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி சபை சட்டத்தின் 21 ஆம் பிரிவின் பிரகாரம் வீடுகள் மற்றும் கட்டிடங்கள் நிர்மாணத்திற்காக அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்களை அங்கீகரித்ததன் பின்னர் அவ்வீடுகளில் குடியிருப்பதற்கு முன்னர் இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட வேண்டிய போதிலும் 2014 முதுல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்டிருந்த 439 விண்ணப்பங்களில் 48 இணக்கச் சான்றிதழ் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) 2013 ஆம் ஆண்டின் போது கடைகள் குத்தகைக்கு வழங்கும் போது 15 கேள்விதாரர்களிடமிருந்து ஒரே தடவையில் அறிடப்பட்ட ரூபா 5,62,730 ஆன வைப்புப் பணம் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 விளைவற்ற / குறைபயன்பாட்டிற்கான சொத்துக்கள்

பெறுமதி அளவினை முடியாத மடிக் கணனியொன்றும் ரூபா 3,000 பெறுமதியான மிதி வண்டியொன்றும் 06 ஆண்டு முதல் 28 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டதுடன் ரூபா 25,161,056 பெறுமதியான மோட்டார் கிரேடர் ஒன்றும் 03 மோட்டார் சைக்கிள்களும் பெறுமதி இனங்காண முடியாத நிலத்தில் பரப்பும் கல் உற்பத்தி இயந்திரமொன்று சீமெந்துகள் உற்பத்தி இயந்திரமொன்று 03 ஆண்டுகளுக்கும் 20 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டன.

#### 3.5.2 வாகனப் பயன்பாடு

சபைக்குச் சொந்தமான 02 வாகனங்களின் ஓட்டக் குறிப்புக்களில் வாகனங்களை பயன்படுத்திய உத்தியோகத்தர் கையொப்பமிட்டு உறுதிப்படுத்தப்படாமல் 3,011 கி.மீ ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. அதற்கான எரிபொருளாக ரூபா 49,717 செலவிடப்பட்டிருந்தது.

### 3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்

கலகெதர சுகாதார பாலிகா வித்தியாலயத்திற்கு முன்னால் பொது வர்த்தக தொகுதி நிர்மாணத்திற்கான 2014 ஆம் ஆண்டு முதல் 2017 திசெம்பர் வரை ரூபா 2,309,526 செலவிடப்பட்டிருந்தது. உரிய நிர்மாண நடவடிக்கைகள் முறைப்படி மேற்கொள்ளப்படாமல் நிர்மாண வேலைகள் இடை நடுவில் நிறுத்தப்பட்ட காரணத்தினால் அக்கட்டிடங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. இந் நிர்மாணத்திற்காக உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திலிரந்து பெற்றுக்கொண்ட ரூபா 2,500,000 கடன் தொகைக்கு ஒப்பாக எவ்வித நலனொன்றும் பெற்றுக்கொள்ளாமல் 2017 திசெம்பர் 31 வரை உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்திய வட்டி ரூபா 576,418 ஆக இருந்தது.

### 3.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்

2014 செப்தெம்பர் 30 ஆந் திகதி நடைபெற்ற சபையின் 08 (xvi) ஆம் இலக்க நிர்மாணத்தின் பிரகாரம் ஓர் ஆண்டு காலத்திற்கு மாத்திரம் மதிப்பீட்டு வாடகையின்

50 சதவீதம் அறவிடப்பட வேண்டிய போதிலும் சபை தீர்மானத்திற்கு முரணாக நடவடிக்கை எடுத்து 2015 சனவரி 01 முதல் உடன்படிக்கை மேற்கொண்டு 05 ஆண்டு காலப்பகுதிக்காக 50 சதவீதம் வாடகை அறவிடுவதற்கு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் காரணமாக, சலுகை காலமான 2015 விடுபட்டதன் பின்னர் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்காக மதிப்பிடப்பட்டட வாடகையில் 50 சதவீதம் கழித்து குத்தகை அறவிடப்பட்டதன் காரணமாக சபை நிதியத்திற்கு ரூபா 1,522,600 ஆன நட்டமொன்று இடம்பெற்றிருந்தது.

**3.8 பெறுகை**

**3.8.1 பெறுகை திட்டம்**

ரூபா 43,815,506 ஆன மூலதன செலவினத்தை சபை மேற்கொண்டிருந்த போதும் மீளாய்வாண்டிற்காக பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.8.2 ஒப்பந்த நிர்வாகம்**

(அ) முத்துகெலியா முதல் தடாகம் ஊடாக திவுல்கும்புற வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 1,947,334 இற்கு மதிப்பீடு செய்து வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த நிர்மாண வேலையில் 2018 பெப்ரவரி 22 ஆந் திகதி வரை கொடுப்பனவு பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கொங்ரீட் வீதியின் மேற்பரப்பு ஆரம்ப முதல் இறுதி வரை கொங்ரீட்டின் இரு பக்க வீதி உட்புறம்பாக வளைந்த வகையில் அநேகமான இடங்களில் தேன் வதை போல (Honey Comb) தோன்றியிருந்தது.

(ii) கொங்ரீட்டை உடைத்து பரிசோதித்த போது இலகுவாக உடையக்கூடிய வகையில் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது.

(iii) மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிலைமை பரிசோனை அறிக்கையின் பிரகாரம் குறித்த கொங்ரீட் வீதியின் 03 பகுதிகளில் 08 இடங்களில் அவதானிக்கப்பட்டு பரிசோதனை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த 5 இடங்களின் அமுக்கம்- (FC) பெறுமதி 20 $N/mm^2$ இனை விட குறைவாக இருந்தது.

(ஆ) நாமல்தென்ன கொரகஹமுல வரையான வீதியை அபிவிருத்தி செய்வதற்கான ரூபா 1,977,569 மதிப்பீடு செய்யப்பட்டு வேலைகள் செய்யப்பட்டிருந்த நிர்மாணத்தின் கொடுப்பனவு பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கொங்ரீட் வீதியின் மேற்பரப்பு ஆரம்ப முதல் இறுதி வரை கொங்ரீட்டின் இரு பக்க வீதி உட்புறம்பாக வளைந்த வகையில் அநேகமான இடங்களில் தேன் வதை வடிவம் (Honey Comb) தோன்றியிருந்தது.

(ii) கொங்ரீட்டை உடைத்து பரிசோதித்த போது இலகுவாக உடையக்கூடிய வகையில் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது.

(iii) மதிப்பீட்டின் பிரகாரம் கொங்ரீட் வீதியின் மேற்பரப்பு 06 அங்கு தடிப்பில் இருக்க வேண்டிய பொதிலும் அதனை உடைத்து பரீட்சித்த போது அதன் தடிப்பு 05 அங்குலம் மாத்திரமாக இருந்தது.

(iv) வீதிக்கு இடப்பட்டிருந்த கொங்ரீட் காணின் இரு பக்க வீதி உட்புறம்பாக வளைந்த வகையில் அநேகமான இடங்களில் தேன் வதை வடிவம் (Honey Comb) தோன்றியிருந்தது.

(v) மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை பொருட்கள் ஆய்வு கூடத்திலிருந்தும் பாத்ததும்பர பிரதேச சபையின் Hammer test பரிசோதனை மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வீதியின் மேற்பரப்பில் கொங்ரீட்டின் தர பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் கலவையின் தரத்தின் சராசரி (Average) முறையே 18.2 N/mm மற்றும் 15 $N/mm^2$ ஆக இருந்ததுடன் அந்த அறிக்கைகளின் பிரகாரம் வீதியின் கொங்கிரீட் தரப் பரிசோதனையில் சித்திபெறவில்லை.

(இ) கோப்பிவத்த 10 ஆம் கட்டை வீதியின் காண் முறைமையை அமைப்பதற்காக ரூபா 6,987,710 தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்டு வேலை பூர்த்தி செய்யப்பட்ட நிர்மாண வேலையின் கொடுப்பனவு பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ரூபா 5,129,131 ஆன பெறுமதியுடன் கூடிய 920 மீற்றர் தூரத்திற்கு வீதிக்கு அண்மித்தாக நிர்ணயிக்கப்பட்டிருந்த கொங்ரீட் உட்புறத்தில் சில இடங்களில் கொங்ரீட் கவலை இலகுவில் உடையக்கூடிய மட்டத்தில் பலவீனமாக காணப்பட்டது. கொங்ரீட்டை உடைத்து பரிசோதித்த போது அதன் கலவை மண்ணுடன் கூடிய மணல் கலவையொன்று அவதானிக்கப்பட்டது. இடப்பட்டிருந்த ¾ அங்குல மெடல் இலகுவாக உடையக் கூடிய தன்மையில் இருப்பது அவதானிக்கப்பட்டது.

(ii) வீதிக்கு அண்மித்தாக நிர்மாணிக்கப்பட்டிருந்த 300 மீற்றர் அளவிலான துறைமுகம், 200 மி.மீ, 370 மி.மீ இற்கு இடைப்பட்ட விலகலில் கொங்ரீட் வீதியின் மேற்பரப்பிற்கு மேலாக நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக வீதியின் மேற்பரப்பு ஊடக செல்லும் மழை நீர் வடிகாலுக்கு புக முடியாமல் வீதியில் வழிந்தோடுவதால் கொங்ரீட் வடிகாண் இடப்பட்டதன் தேவைப்பாடு நிறைவேற்றப்படவில்லை.

(iii) வடிகாணின் உட் பகுதியின் இரண்டு பங்குகளிலும் அநேகமான இடங்கள் (Honey Comb) வடிவில் காணப்பட்டன.

(iv) இக்காணின் நிர்மாணத்திற்காக பயன்படுத்தியிருந்த ¾ அளவிலான மெடல் தொடர்பான தரப்பரிசோதன மேற்கொள்ளப்பட்டிருக்க

(உ) கழிவுப் பொருள் இடும் காணியில் கழிவுப் பொருள் அடுக்கும் இடத்தை மேம்படுத்துவதற்காக ரூபா 3,000,000 இற்கு மதிப்பீடு செய்து வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த நிர்மாணத்தின் கொடுப்பனவு பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன், பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தீன் சுற்றுபுறு விராந்தையின் பல இடங்களை உடைத்து பரீட்சித்த போதுஇலகுவாக உடையக்கூடிய வகையில் பலவீனமான மணல் சீமெந்து கலவை இடப்பட்டிருந்தது.

(ii) நிர்மாணிக்கப்பட்ட சுற்றுபுறு விராந்தையின் பல இடங்கள் வெடிப்பேற்பட்டிருந்தன.

(iii) மதிப்பீட்டின் 5.3 ஆம் வேலை விடய இலக்கத்தில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் கட்டிடத்தின் உள்ளே நிலத்திற்கு இடம் பெற்றிருந்த கொங்ரீட்டின் தடிப்பு 05 அங்குலமாக இருக்க வேண்டிய போதிலும் அதில் பல இடங்களை உடைந்த பரீட்சித்த போது அதன் தடிப்பு 4 அங்குலமாக அவதானிக்கப்பட்டது. அவ்வாறே கொங்ரீட்டின் சுற்று புறம்பாக 02 அங்குல அளவிற்கு கீழாக இலகுவில் உடையக்கூடிய பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது.

(iv) மேற்குறித்த படி நிலத்திற்கு இடப்பட்டிருந்த கொங்கிரீட் அதிகமான இடங்களில் நிலக்குத்தாகவும் நெடுப்புறமாக கோடுகள் விழுந்திருந்தன.

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் படி, மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம், உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்துடன் ஒப்பிடுகையில் 02 வருமான விடயங்களில் 24 சதவீதம் முதல் 29 தவீதம் வரையிலும் 03 செலவின விடபங்களில் 26 சதவீதம் முதல் 217 சதவீதம் வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு சாதனமாகப் பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது பிரதேச சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|---|
| (அ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | | மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு செலவிடப்படாமை |
| (ஆ) | ஒப்பந்த நிர்வாகம் | i. | போதியளவு மேற்பார்வை இல்லாமை |
| | | ii. | ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்களில் கூடுதலான குறைபாடுகள் காணப்பட்டமை |
| (இ) | வருமான நிருவாகம் | i | நிலுவை வருமானம் அறவிடப்படாமை |
| | | ii. | முறையான கணிப்பீடென்று மேற்கொள்ளப்பட்டு வருமான அலகுகள் இனங்காணப்படாமை. |
| (ஈ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | i | முறையான கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு சபைக்குரிய சொத்துக்கள் இனங்காணப்படாமை. |
| | | ii. | சொத்துக்கள் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டமை |
| (உ) | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் | | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர்தீர்வு செய்யப்படாமை |